**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.398** **நாள் : 24.11.2025**

**வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்து வழங்குவது தொடர்பாக ரங்கோலி கோலமிட்டும், மிதிவண்டிப் பேரணி மூலமும் சென்னை பள்ளி மாணவ, மாணவிய வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.**

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் - 2026 தொடர்பான கணக்கீட்டுப் படிவங்கள் வழங்குவது வாக்காளர் உதவி மையங்கள் மூலம் படிவம் பூர்த்தி செய்து வழங்குதல் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை மீளப் பெறுவது தொடர்பாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, இன்று (24.11.2025) அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட சுப்புராயன் தெரு - சென்னை மேல்நிலைப் பள்ளி மற்றும் புல்லா அவென்யூ - சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் ரங்கோலி கோலமிட்டும், 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் மிதிவண்டிப் பேரணி மூலம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் - 2026 தொடர்பான விழிப்புணர்வுப் பதாகைகள் ஏந்தியும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த விழிப்புணர்வு பேரணியில் தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் சாரண, சாரணியர் பிரிவைச் சார்ந்த 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். இந்த பேரணியானது, புல்லா அவென்யூ-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், பச்சையப்பா கல்லூரியிலும் தொடங்கப்பட்டு அண்ணாநகர் டவர் பூங்காவிற்கு வந்தடைந்தது. இதனைத் தொடர்ந்து, அண்ணாநகர் டவர் பூங்காவில் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பதாகையில் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், கல்வி அலுவலர்கள், உதவி கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**